**தலைப்பு 301- கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1..1 அபிப்பிராயம்**

தலைப்பு- 301 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 301-1-1-1505 ஆம் செலவு விடயத்தின் கீழ் NEDAC/ICT மற்றும் CICTAB நிறுவனங்களின் அங்கத்துவப் பணத்தினைச் செலுத்துகின்ற ரூபா 1,505,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் அந்த நிறுவனங்களின் அங்கத்துவம் இன்னும் காணப்படுகின்றதா என்பது கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | இணங்குகிறேன். இந்த நிறுவனங்களின் அங்கத்துவத்தினைப் பேணுவதற்காக அங்கத்துவப் பணத்தினைச் செலுத்துவதற்காகவே இதன் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டில் அங்கத்துவப் பணத்தினை செலுத்துவதற்காக இன்வொயிஸ்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்துக்கொண்டதன் பின்னரே நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 284,762 பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் பின்னிணைப்பு (iii) படிவத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களைச் சரியாக தயாரிப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 6 செலவு விடயங்களுக்கான ரூபா 307,595 தொகையான பொறுப்புக்களை விடுவிப்பதாற்காக மீளாய்வாண்டில் நிதி ஏற்பாடு போதியதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் அச் செலவு விடயங்களின் மிகுதி நிதி ஏற்பாடு ரூபா 51,712 மாத்திரமாகும். | இணங்குகிறேன். நிதி ஏற்பாட்டினை முறைப்படியாக பயன்படுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்ளாதிருப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

### 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினை முறைப்படியாக அமுல்படுத்துவதற்காக வினைத்திறனான நடைமுறை உள்ளது என சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட அவதானிப்புக்களுக்கு இணங்க அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு உள்ளகக் கணக்காய்வாளர் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை அதற்காக உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்காததுடன் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் கீழ் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கும் வாய்ப்பு கிடைக்வில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வைப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இழப்பீடு சம்பந்தமாக பொது வைப்புக் கணக்கில் (6000-0-0-17-0-32) 2022 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி ரூபா 2,903,644 ஆக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கில் ரூபா 2,879,594 மீதி காணப்பட்டது. அதற்கிணங்க ஆண்டின் போது ரூபா 24,050 மாத்திரம் தீர்த்துவைக்கப்பட்டது.<br><br>இவ்வைப்புக்கள் 08 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டு வரும் மீதியாக உள்ளதுடன் பொதுவைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதி சிகாஸ் மீதி பட்டியலில் மேற்குறிப்பிட்ட மீதிகள் 2015 திசெம்பர் 31 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | அது தொடர்பாக உறுதியான தகவல்களை தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளதுடன் நிதியத்திடம் இருந்த கணக்குகள் சில நிர்ணயிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அரசாங்க கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டது எனவும் சிகாஸ் முறைமைக்கு 2015 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டது எனவும் ஊகித்துக்கொள்ளலாம். | வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட திகதியை சரியாக பதிவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,879,594 இழப்பீட்டுப் பணம் 8 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது காணப்பட்டதுடன் அவ்வாறு இடம்பெறாமைக்கான காணரமாக இழப்பீடு சம்பந்தமான வழக்கு முடிவடைந்திருக்கவில்லை என வைப்புக்கணக்கின் இணக்கக் கூற்றில் | பொது வைப்புக் கணக்கின் இவ்வாறான வைப்பு மீதிகளை முன்கொண்டு வருவதற்கான ஒரு காரணமாவது பிணக்குகளுக்கு நியாயத்தீர்ப்பளிப்பதற்காக சங்கங்களில் வைப்புச் செய்யப்படுகின்ற பிணக்குகளுக்கு நியாயாத்தீர்ப்பளிக்கும் கட்டணம் மற்றும் பிணக்குகளின் நியாயத்தீர்ப்பினை நீதிமன்றங்கள் அதிகாரமளித்ததன் பின்னர் நீதிமன்றங்களால் அறவிடப்படுகின்ற | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த மீதிகள் அனைத்திற்குமுரிய வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை என்பதற்கான போதியளவு உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் நீண்டகாலமாக இக்கணக்கிற்கு மாற்றம் செய்வதற்குத் தேவை ஏற்படும் என்பதனாலாகும். பிணக்குகளின் நியாயத் தீர்ப்பு விசாரணையானது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது. அப்பணமானது பிணக்குகளின் நியாயத்தீர்ப்பு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படாததுடன் சங்கத்தினால் மீள வேண்டப்படாமையின் அடிப்படையில் இக்கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டது. நீதிமன்ற தண்டப்பணமானது சங்கங்களுக்கு விடுவிக்காமை பிணக்குகளின் நியாயத்தீர்ப்பு இலக்கம் குறிப்பிடாது வழக்கு இலக்கம் மாத்திரம் குறிப்பிட்டு தண்டப்பணத்தை அனுப்பியுள்ள சந்தர்ப்பங்களின் போது திணைக்களத்தில் இருந்த விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அந்த விடயத்தினை தீர்துத்துவைக்கச் செய்வதற்காக போதியளவில் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. |

## 3. செயற்பாட:டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1. கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வரைபு செயலாற்றல் அறிக்கைக்கு இணங்க அமுல்ப்படுத்தப்பட்ட 08 அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட 50 செயற்பாடுகளில் 22 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பிரிவில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்கள் இல்லாததன் அடிப்படையில் செய்யக்கூடிய செயற்பாடுகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் 08 பிரிவுகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட 270 செயற்பாடுகளில் 97 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். பிரிவுகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமையின் அடிப்படையில் முடியுமான வரை உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல் இடம்பெற்றுள்ளது. | திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முற்பணங்கள் ''பீ'' கணக்கின் பின்னிணைப்பு 05 இற்கு இணங்க தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்ததிற்கும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் | பல ஆண்டுகளாகக் காணப்பட்டு வரும் மீதியானதுடன் தீர்த்துவைப்பதற்கு மூல ஆவணங்களை தேடிக்கண்டுபிடிப்பதில் சிக்கல் காணப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகளைத் தயாரிப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிக்குமிடையேயான வித்தியாசத்திற்கான காரணம் விளக்கமளிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 160,598 வித்தியாசத்திற்கான காரணம் விளக்கமளிக்கப்படவில்லை. | எனினும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | அமைச்சுக்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்று அறவிடப்படாத கடன் மீதிகளுக்கு மத்தியில் 33 ஆண்டுகள் பழைமையான ரூபா 40,172 கடன் மீதி காணப்பட்டதுடன் மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 32 ஆண்டுகள் பழைமையான கடன் மீதி ரூபா 47,353 என அவதானிக்கப்பட்டது. 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சற்றிறக்கை 01 இல் குறிப்பிட்டவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 1.6 , 1.7 மற்றும் 6.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கடன் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இடமாற்றம் பெற்றுச்சென்று அறவீடு செய்யப்படாது காணப்பட்ட 30 ஆண்டுகள் பழைமையான ரூபா 19,262 மற்றும் 23 ஆண்டுகள் பழைமையான ரூபா 40,650 தொகையான 02 கடன் மீதிகள் மீளாய்வாண்டின் போது கணக்குகளிலிருந்து நிக்கப்பட்டதுடன் அவ்வாறு நீக்குவது தொடர்பான திறைசேரி அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகள் நிர்ணயிக்கப்பட்ட உறுதிப்படுத்தலின் அடிப்படையில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு தீர்த்துவைப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 70,401 கடன் மீதி 25 ஆண்டுகளாக அறவிடப்படாது காணப்பட்டதுடன் சேவையை விட்டுச்டிசென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 48,720 கடன் மீதி 41 ஆண்டுகளாக அறவிடப்படாது காணப்பட்டது. அது சம்பந்தமாக 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை தொடர்பாக வழங்கப்பட்ட 01 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் (உ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய நபர்களின் தகவல்கள் தேடிப்பார்க்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதிகள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 யூலை 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளுக்காக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டுள்ளன. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5 நல்லாட்சி

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படவில்லை. | அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு உள்ளகக் கணக்காய்வாளர் வெற்றிடத்தினை நிலரப்புவதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை அதற்காக உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்காததுடன் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் கீழ் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கும் வாய்ப்பு கிடைக்வில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 6 வெற்றிடங்களில் ஒரு பிரதி ஆணையாளர் பதவி 2 உதவி ஆணையாளர் பதவிகள் என்பன 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் திணைக்களம் சார்ந்த பிரதி ஆணையாளர் பதவி, உள்ளகக் கணக்காய்வாளர் பதவி, சட்ட உதவி உத்தியோகத்தர்கள் பதவி என்பன 3 ஆண்டுகள் | பிரதி ஆணையாளர் பதவி, உதவி ஆணையாளர் (திணைக்களம் சார்ந்த) பதவி என்பன தரம் உயர்த்துதல்கள் என்பதாக இருப்பதுடன் அதற்கு தகைமைபெற்ற உத்தியோகத்தர்கள் திணைக்களத்தின் பதவியணியில் இல்லை. எவ்வாறாயினும் உதவி ஆணையாளர் பதவியில் | அத்தியவசயமான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| காலமாகவும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | சிரேஷ்ட உத்தியோகத்தரை கடமையை நிறைவேற்றுவதற்காக நியமிப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2021-08-02 அந் திகதி ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கிணங்க அந்த உத்தியோகத்தர் 20220-02-08 ஆந் திகதி இடமாற்றம் பெற்றுள்ளார். தற்பொழுது இலங்கை நிருவாக சேவையின் II ஆம் தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தர் உதவி ஆணையாளர் பதவியில் கடமைபார்த்து வருகின்றார். உள்ளகக் கணக்காய்ளவார் பதவி வெற்றிடத்திற்காக அரசாங்க நிருவாக அமைச்சிடம் அந்த வெற்றிடத்தை நிரப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை வெற்றிடத்திற்காக ஒரு உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் 2022-06-27 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் நிதி அமைச்சின் BD/CBP/01/01/04-2022 ஆம் இலக்க மற்றும் 2022-04-26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்புக்களை நிறுத்துதலின் அடிப்படையில் இவ்வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது. | |
| (ஆ) | இரண்டாம் மட்டத்திலுள்ள மொழி பெயர்ப்பாளர் பதவி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது. | 2023-04-28 ஆந் திகதி அப்பதவியின் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அத்தியவசியமான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |